## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20–ம் நாள் திங்கள்கிழமை வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிசெல்வி என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **குருசாமி** | தொழில்: | |
| த.பெ: | நரசிம்மன் | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**20.4.2026 OS.37/2023 வா.சா.1. குருசாமி**

**<u>1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திற்கு யார் விவரம் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். நான் சத்துணவு அமைப்பாளராக எந்த ஊரில் எந்த காலகட்டத்தில் பணிபுரிந்தேன் என்றால் மேலவெள்ளூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 1986 முதல் 2013 வரை பணிபுரிந்தேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பணி ஓய்வு பெற்றுவிட்டேன் என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) தாவா சொத்தானது மேலவெள்ளூர் குரூப் மேலவெள்ளூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் எத்தனை சர்வே எண்களுக்கு தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 இலக்க சொத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களின் சர்வே எண், விஸ்தீரனம், நான்குமால் விவரம் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண் மற்றும் விஸ்தீரனம் தெரியும் நான்குமால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து வேறு நபர்கள் வசம் உள்ளதால் எனக்கு நான்குமால் விவரம் தெரியவில்லை என்றால் சரியல்ல நாளுக்குநாள் நான்குமால் விவரம் மாறிக்கொண்டிருக்கிறது. நான் பிராதில் என்ன நான்குமால் சொல்லியுள்ளேன் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3) தாவா வழக்கை நான் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவை பெயர் மாற்றம் போஸ் செய்துவைத்துள்ளார் அதனை மாற்ற தாவா வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். போஸ் பெயரில் பட்டா மாறி 50 வருடம் இருக்கும் என்றால் எப்போது மாறியது என்று எனக்கு தெரியாது. போஸ் பெயரில் பட்டா எப்போது

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.04.20 16:43:20 +0530

மாறியது என்று நான் எனது பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) வழக்கில் 2 முதல் 10 பிரதிவாதிகளை எதற்காக நான் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்ற விவரத்தை எனது பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் எனது சொத்தை வைத்து பிரதிவாதி கடன் வாங்கியதால் நான் அவர்களை சேர்த்துள்ளேன். எனது தகப்பனார் காலமாகி 10 ஆண்டுகள் இருக்குமா என்றால் இருக்கும். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலம் வரையில் போஸ்ன் அனுபவத்தை தடைசெய்தாரா என்றால் எனது தகப்பனார் காலம் வரையில் போஸ் தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை.

5) போஸ் எனது தகப்பனார் காலத்தில் தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் 50 வருடங்களாக போஸ் அவரது பாத்தியத்தில் தாவா சொத்தை வைத்து அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல எனது தகப்பனார் காலம் வரையில் நாங்கள் தான் அனுபவம் செய்து வந்தோம். எனது தகப்பனார் காலத்திற்கு பிறகு யார் அனுபவம் செய்து வருகிறார் என்றால் போஸ் அவரது அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்.

6) எனது தகப்பனார் காலத்திலேயே எனது தகப்பனாரின் சம்மதத்துடன் போஸ் பெயரில் பட்டா மாறிவிட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழின் படி எனது தகப்பனார் 17.11.1998 ஆம் தேதியிலேயே காலமாகிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இறப்பு சான்றிதழை வைத்து நான் வாரிசு சான்றிதழ் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான் எனது தகப்பனாருக்கு நான் மட்டுமே வாரிசு என்பதால் வாரிசு சான்றிதழ் பெறவில்லை.

7) நான் பணியாற்றிய மேலவெள்ளூர் கிராமத்திற்கும் எனது ஊரான அம்பலத்தாடிக்கும் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் மேலவெள்ளூரிலேயே 40 ஆண்டுகாலமாக பணியாற்றி வந்ததால் தாவா சொத்துக்கள் போஸ்ஸின் அனுபவத்தில் இருந்து வந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல எனது தகப்பனார் காலம் வரையில் நாங்கள் தான் அனுபவம் செய்து வந்தோம் ஆள்பலத்தால் அதன் பின்னீடு போஸ் அனுபவம் செய்து வருகிறார். போஸ் அதிகாரத்தின் பேரில் அனுபவம் செய்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் அது சம்பந்தமாக நான் காவல் துறையில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் 2

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.20 16:43:29 +0530

ஆண்டுகளுக்கு முன்பு திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

8) மேற்படி புகார், முதல் தகவல் அறிக்கை, மனு ரசீது ஏதேனும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் போஸ்ஸின் தாவா சொத்தின் மீதான பாத்தியத்தையும் அனுபவத்தையும் ஏற்றுக்கொண்டதால் தான் அவர் மீது எவ்வித புகாரும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பட்டா பாஸ்புத்தகத்தில் பெயர், தகப்பனார் பெயர், சர்வேஎண், ஊர் விவரங்கள் அடித்தல் திருத்தலாக உள்ளது என்றால் அடித்தல் திருத்தல் செய்யப்பட்ட இடத்தில் கையெழுத்து இடப்பட்டுள்ளது.

9) மேற்படி அடித்தல் திருத்தல் உள்ள இடங்களில் ஊதா நிற மையால் கையெழுத்து இடப்பட்டுள்ளது என்றாலும் தாசில்தார் பச்சை நிற மையால் கையொப்பம் இடவில்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை அடித்தல் திருத்தலோடு கையொப்பமிட்டு போர்சரியாக நான் வழக்கிற்காக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் தாசில்தார் கையொப்பமோ அரசு முத்திரையோ இடப்படவில்லை அதனால் இந்த ஆவணம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல மேற்படி ஆவணத்தில் கையொப்பம் இடப்பட்டு முத்திரையிடப்பட்டுள்ளது.

10) வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கையொப்பம் தாசில்தார் இடவில்லை என்றாலும் வேறு நபர்கள் யாரோ போட்டது என்றாலும் அன்றைக்கு இருந்த அதிகாரி தான் கையொப்பம் செய்து முத்திரையிட்டு வழங்கியுள்ளார். அன்றைக்கு இருந்த அதிகாரி யார் அவர் என்ன பதவி வகித்தார் என்றால் கர்ணம் தான் போட்டு இருப்பார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் கர்ணம் மற்றும் நில அளவையார் என குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் அதை நான் பிறப்பதற்கு முன்பு வாங்கப்பட்ட ஆவணமாகும் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

11) வா.சா.ஆ.2 ஆவணத்தில் 12.07.1975 என தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 1955 ஆம் ஆண்டிலேயே பிறந்துவிட்டேன் என்றாலும் நான் வழக்கிற்காக வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்பட்ட காலமான 1975 ஆம் ஆண்டில் பிறக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. **சாட்சி தற்போது நான் சிறுவயதில் இருக்கும்போது ஏற்பட்ட ஆவணம் என்பதால் அது பற்றி எனக்கு தெரியாது என சாட்சியம் அளிக்கிறார்**. நான் 1986 ல் பணிக்கு சேர்ந்தபோது எனது வயது 33 என்றால் சரிதான்.

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.20 16:43:36 +0530

12) நான் எனது வயது குறித்து முரண்பாடான தகவல்களை நீதிமன்றத்தில் தெரிவித்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கருப்பையா கோனார் என்பவர் 1ம் பிரதிவாதி போஸின் தகப்பனார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 SLR ல் தாவா சொத்துக்களுக்கு கருப்பையா பெயரில் தான் பட்டா எண்.7 ஆக தாக்கல் ஆகி உள்ளது என்றால் சரிதான். கருப்பையாவும் எனது தகப்பனாரும் சொத்துக்களை பாகம் செய்து கொண்டதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பாகவிஸ்தி ஆவணம் உள்ளது நான் அதை தாக்கல் செய்துள்ளேன்.

13) நான் தாக்கல் செய்துள்ள ஆவணப்பட்டியலில் நான் சொல்லக்கூடிய பாகவிஸ்தி ஆவணமே இடம் பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கான பட்டா போஸ் பெயரில் மாறிய விவரம் எனக்கு 30 ஆண்டுகளுக்கு முன்பே தெரியும் என்றால் சரியல்ல வில்லங்கச் சான்றிதழ் போட்டு பார்த்த பிறகு தான் மேற்படி விவரம் தெரிய வந்தது. வில்லங்கச் சான்றிதழ் எப்போது போட்டு பார்த்தேன் என்றால் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தான் போட்டுப்பார்த்தேன். நான் எந்த தேதியில் வில்லங்க சான்றிதழ் போட்டுப் பார்த்தேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

14) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 6 வில்லங்கச் சான்றிதழ் மூலமாக பட்டா மாறுதல் தொடர்பாண விவரம் தெரிய வராது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ஆவணத்தில் முதல் முதலாக எந்த ஆவணத்தின் மூலம் வில்லங்கம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 4, 5 ஆவணம் போஸ் ஏற்படுத்தியுள்ளதால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஏற்கனவே இந்த வழக்கில் கண்ட போஸ் மற்றும் சில நபர்களுக்கு 07.07.2011 ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். **மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை சாட்சி ஒப்புக்கொண்டதால் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

15) மேற்படி வழக்கறிஞர் அறிவிப்புக்கு போஸ் 22.07.2011 ம் தேதியில் என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் பதில் அறிவிப்பை கொடுத்துள்ளார் என்றால் சரிதான் **மேற்படி வழக்கறிஞர் பதில் அறிவிப்பை சாட்சி ஒப்புக்கொண்டதல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்துக்கள் பற்றி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பின் அடிப்படையில் நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் வழக்கு எதுவும் தாக்கல்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.20 16:43:44 +0530

செய்யவில்லை ஆவணம் கிடைக்காததால் வழக்கு எதுவும் தாக்கல் செய்ய முடியவில்லை.

16) மேற்படி வழக்கறிஞர் பதில் அறிவிப்பான பி.வா.சா.ஆ.2க்கு பின்னர் நான் இந்த நம்பர் 1ம் பிரதிவாதியிடம் ரூபாய் 25,000/- ரொக்கம் பெற்றுக்கொண்டு மேல் நடவடிக்கை செய்யமாட்டேன் என உறுதி அளித்தேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த காலக்கட்டத்திலேயே தாவா சொத்தின் பாத்தியமும் அனுபவமும் இந்த நம்பர் 1ம் பிரதிவாதியின் வசம் தான் இருந்து வந்தது என்றால் சரியல்ல எங்கள் வசம் தான் இருந்து வந்தது. நான் எங்கள் வசம் தான் இருந்து வந்தது என்பதைக் காட்ட கடந்த 50 வருடங்களுக்கான நிலவரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

17) எனது தகப்பனார் காலக்கட்டத்திலேயே 50 ஆண்டுகளுக்கு முன்பே இந்த நம்பர் 1ம் பிரதிவாதி எனது தகப்பனாரிடம் ரூபாய் 13,000/- தொகை கொடுத்து தாவா சொத்துக்களை வாய்மொழியாக கிரையம் பெற்று எனது தகப்பனார் சம்மதத்தின் பேரில் வருவாய் துறை ஆவணமும் மாற்றப்பட்டு 1ம் பிரதிவாதியின் அனுபவத்திலும் பாத்தியத்திலும் தாவா சொத்து இருந்து வருகிறது என்றால் சரியல்ல தாவா சொத்துக்களை விற்க வேண்டிய அவசியம் எனது தகப்பனாருக்கு எழவில்லை.

18) எனது தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை கிரையம் கொடுத்ததால் தான் எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலம் வரையில் 1ம் பிரதிவாதியின் அனுபவத்தையும் பாத்தியத்தையும் தடைசெய்யவோ கேள்விகேட்கவோ இல்லை என்றால் சரியல்ல. UDR காலத்திற்கு முன்பாகவே 1ம் பிரதிவாதி போஸ் பெயரில் 535 ஆக பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. UDR காலத்திற்கு முன்பு இருந்த நிலையிலேயே UDR சர்வேயின் போதும் தொடர்ச்சியாக 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா எண். 535 ல் தாவா சொத்துக்கள் பதிவாகிவிட்டது என்றால் சரியல்ல.

19) மேற்படி பட்டாக்களின் அடிப்படையில் வருவாய் கணக்குகளில் 1ம் பிரதிவாதியின் பெயர் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு நிலவரி ரசீதுகள் அனைத்தும் 1ம் பிரதிவாதி பெயரில் தான் ஏற்பட்டுள்ளது என்றால் லோன் பெற வேண்டி 1ம் பிரதிவாதி ரசீது போட்டு இருப்பார். தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் ரசீது ஏற்பட்டதற்கு நான் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் மேற்படி வரி ரசீதுகள் 1ம்பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியாததால் நான் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை.

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.20 16:43:50 +0530

20) தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தாவா சொத்துக்களை கடந்த 2002 ஆம் ஆண்டு அடமானம் வைத்து 1ம் பிரதிவாதி கடன் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது வில்லங்கச் சான்றிதழ் பார்த்தபோது தான் மேற்படி விவரம் தெரிந்தது. நான் தாவா வழக்கில் எந்தெந்த ஆவணங்களை செல்லா நிலை ஆவணம் என கேட்டுள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது உடன் பிறந்த சகோதரி பெயர் என்னவென்றால் ராசமாணிக்கம் ஆகும். நான் எனது சகோதரியை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

21) நான் தாவா வழக்கில் உரிமை விளம்புகை எதுவும் கோரவில்லை என்றால் சரிதான். நான் பிராதன பரிகாரமான விளம்புகை பரிகாரம் கோராமல் கூடுதல் பரிகாரமான Null and void பரிகாரம் மட்டும் கோரியிருப்பதால் தாவா வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் 1ம் பிரதிவாதியின் பாத்தியத்தையும் அனுபவத்தையும் அங்கீகாரம் செய்து பதிவுத் துறையில் முறைப்படி பதிவு செய்யப்பட்ட ஆவணகள் என்பதாலும் ஏற்கனவே 1ம் பிரதிவாதி வாய்மொழியாக பெற்ற கிரையம் மற்றம் பட்டாக்கள் ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டதாலும் நான் கேட்டுள்ள பரிகாரங்கள் காலாவதிதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாலும் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

22) தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வந்து அவர் பல்வேறு ஆவணங்கள் மூலம் கடன் பெற்றும் மற்றும் உரிமை மாற்றம் செய்துள்ளார் மேற்படி ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றாலும் சரியல்ல. பட்டா மாறுதல் தொடர்பாக வருவாய் துறையில் எவ்வித நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். காவல் துறையிலும் அதற்காக நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

**(10 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.04.20 16:43:58 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam